

நெல்லை தச்சநல்லூர் பகுதியில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற திண்ணைப் பிரச்சாரம் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று உரையாற்றினார். உடன் ஞான திரவியம் எம்.பி.மேயர் சரவணன், துணை மேயர் ராஜ்,ஏ. எல்.எஸ்.லெட்சுமணன், தர்மன், தச்சை பகுதிச் செயலாளர் சுப்பிரமணியன், விஜிலா சத்யானந்த்,கருப்பசாமி கோட்டையப்பன்,அருள்மணி, மீரான்மைதீன் உள்பட கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்த திண்ணைப் பிரச்சாரம் பொதுமக்கள் மத்தியில் மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.



தென்காசி மாவட்டம் தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்வில் ரூபாய் 12.34 கோடி செலவில் பு ய மருத்துவக் கட்டிடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் திறந்து வைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மகளிர் சுய உதவி குழுக்களுக்கான வங்கி கடன் இணைப்புக்கான காசோலையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தனுஷ் எம். குமார் எம்.பி. தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.,பழனி நாடார் எம்.எல்.ஏ., சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., ஒன்றியக் குழுத் தலைவர் லாலா சங்கரபாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.



அசாம் மாநிலம், கவுஹாத்தியில் கேலோ – இந்தியா பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்கள் கால்பந்து போட்டியில், அண்ணாமலைப் பல்கலைக்கழக பெண்கள் கால்பந்து அணி பங்கேற்று சாம்பியன் பட்டம் பெற்றது. கால்பந்து விளையாட்டு வீராங்கனைகள் நேற்று (04.03.2024) உயர் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பனை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் கதிரேசன் உள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தலில் - தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணிக்கு

# அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் ஆதரவு!

## பி.என்.அம்மாசி அறிவிப்பு!

*மதுரை, மார்ச் 5-*

அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் மாநில செயற்குழுக் கூட்டம் 28.02.2024 அன்று மதுரை தானப்பமுதலி தெரு, நியூ ராஜா ரெஸ்ட் ஹவுசில் அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் நிறுவனர் தலைவர் பி.என்.அம்மாசி தலைமையில் நடைபெற்றது. பா.சந்திரசேகரன் தீர்மானங்களை வாசித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான “இந்தியா கூட்டணி” 40 இடங்களிலும் வெற்றிபெற அயராது பாடுபட்டு பாசிசத்தை வீழ்த்தி ஜனநாயகம் வென்றிட தோழமைக் கட்சியான வல்லரசு பார்வர்டு பிளாக் தீர்மானிக்கிறது.

தென் மாவட்டங்களில் மதுரை, தேனி வாய்ப்புள்ள இடங்களில் வல்லரசு பார்வர்டு பிளாக் கட்சிக்கு ஓரிடம் ஒதுக்க வேண்டுமென தோழமைக் கட்சியான தி.மு.க.வை கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசை சிறப்புடன் நடத்தி வரும் தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சென்னை கடற்கரையில் தி.மு.க.வை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா நினைவிடம், அண்ணாவழியில் அயராது உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் நினைவகம் மிகச் சிறப்பாகக் கட்டி 26.02.2024ல் திறந்து வைத்ததை வரவேற்று பாராட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிறோம்.

தமிழ்நாடு வந்து பொய்ப் பிரச்சாரம் செய்யும் பி.ஜே.பி. மோடியின் வாய் வளர்ச்சி பொய்யான நம்பிக்கை பாசம் காட்டுவது போல் தமிழக மக்களை மோசம் செய்வது, 10 ஆண்டுகளாக ஆட்சியில் வேலை வாய்ப்பு தராதது, பேரிடர் வெள்ள நிவாரண நிதியில் ஒரு காசு கூட தராமல் வாய்ப்பறை கொட்டும் பி.ஜே.பி.யை உடனடியாக அகற்றவும் மதுரைக்கு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்காமல் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மாநிலக்குழு உறுப்பினர்கள் மதுரை ஆண்டாள்புரம் பாண்டி, உசிலை ராஜாங்கம், சுருளி, உசிலை அழகாத்தேவன், ஆர்.ரவி, கணேசன், தேனி முத்து, மருது மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விக்கிரமங்கலம் க.மாயத்தேவர் நன்றி கூறினார்.




தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கலைஞர் திடல் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு தென்காசி வடக்கு மாவட்டச்செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி சரவணன் வரவேற்புரையாற்றினார். நகரச் செயலாளர் மு.பிரகாஷ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் பத்மநாபன், தங்கவேலு, பரமகுரு, லாலா சங்கரபாண்டியன், முத்துச்செல்வி, டாக்டர்.செண்பக விநாயகம் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

# திருப்பத்தூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் விழா ! 100 தொடர் தெருமுனைக் கூட்டங்கள்!

## திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருப்பத்தூர் மாவட்டத்தின் சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் வகையில் மாவட்டம் முழுவதும், 100 தொடர் தெருமுனை கூட்டங்கள், கழக கொடியேற்றி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு நல உதவிகள், மருத்துவ முகாம்கள், ஆதரவற்ற ஏழை, முதியோர், சிறுவர் இல்லங்கள், காப்பகங்களில் உணவளித்தல் என தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. எனவே திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BLC, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பித்திட வேண்டுகிறேன்.

| வ.எண் | தேதி | சிறப்பு பேச்சாளர் | நடைபெறும் இடம் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|---|
| 1 | 5/3/2028 | எழும்பூர் மோ.கோபிநாதன் | எலவம்பட்டி | கந்திலி மத்திய ஒன்றியம் |
| 2 | | | ஆதியூர் | |
| 3 | | | கொரட்டி | |
| 4 | | | தோரணம்பதி | |
| 5 | | | செவ்வாத்தூர் | |
| 6 | | | நத்தம் | |
| 7 | | | குனிச்சி | |
| 8 | | ஆடுதுறை உத்திராபதி | சந்திரபுரம் | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் |
| 9 | | | மல்லபள்ளி | |
| 10 | | | வேட்டப்பட்டு | |
| 11 | | | அக்ராகரம் | |
| 12 | | | திரியாலம் | |
| 13 | | | அம்மணாங்கோவில் | |
| 14 | | பாரதிதாசன் | 5–வது வார்டு | ஆலங்காயம் பேரூர் |
| 15 | | | 6–வது வார்டு | |
| 16 | | | 9–வது வார்டு | |
| 17 | | | 10–வது வார்டு | |
| 18 | | | 11–வது வார்டு | |
| 19 | | வண்ணை புகாரி | மாதனூர் | மாதனூர் கிழக்கு ஒன்றியம் |
| 20 | | | கீழ்முருங்கை | |
| 21 | | | விண்ணமங்கலம் | |
| 22 | | | பெரியாங்குப்பம் | |
| 23 | | | மின்னூர் | |
| 24 | | தமிழ் பிரியன் | 4–வது வார்டு | உதயேந்திரம் பேரூர் |
| 25 | | | 5–வது வார்டு | |
| 26 | | | 9–வது வார்டு | |
| 27 | | | 11–வது வார்டு | |
| 28 | | | 15–வது வார்டு | |
| 29 | 6/3/2024 | எழும்பூர் மோ.கோபிநாதன் | கசிநாயக்கன்பட்டி | கந்திலி கிழக்கு ஒன்றியம் |
| 30 | | | சு.பள்ளிப்பட்டு | |
| 31 | | | ப.முத்தம்பட்டி | |
| 32 | | | விசமங்கலம் | |
| 33 | | | சிம்மணபுதூர் | |
| 34 | | தூத்துக்குடி சரத்பாலா | செட்டியப்பனூர் | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் |
| 35 | | | மண்டலவாடி | |
| 36 | | | பொன்னேரி | |
| 37 | | | பெத்தகல்லுபள்ளி | |
| 38 | | | சின்னகம்மியம்பட்டு | |
| 39 | | காவேரிப்பட்டணம் இளையராஜா | தும்பேரி | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் |
| 40 | | | சிக்கணாங்குப்பம் | |
| 41 | | | அம்பலூர் | |
| 42 | | | திம்மாம்பேட்டை | |
| 43 | | | மல்லகுண்டா | |
| 44 | | திருப்பத்தூர் மேகநாதன் | கைலாசகிரி | மாதனூர் மத்தியம் ஒன்றியம் |
| 45 | | | சின்னவரிகம் | |
| 46 | | | பெரியவரிகம் | |
| 47 | | | துத்திப்பட்டு | |
| 48 | | | தேவலாபுரம் | |
| 49 | 7/3/2024 | பிரம்மபுரம் பழனி | காக்கங்கரை | கந்திலி மேற்கு ஒன்றியம் |
| 50 | | | எர்ரம்பட்டி | |
| 51 | | | பரதேசிப்பட்டி | |
| 52 | | | மோட்டூர் | |
| 53 | | | கும்மிடிகாம்பட்டி | |
| 54 | | ஆம்பூர் தர்மன் | ஆண்டியப்பனூர் | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் |
| 55 | | | குரிசிலாப்பட்டு | |
| 56 | | | பெருமாபட்டு | |
| 57 | | | பால்னாங்குப்பம் | |
| 58 | | | அண்ணாண்டப்பட்டி | |
| 59 | | சேலம் சுஜாதா | பாச்சல் | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் |
| 60 | | | தாமலேரிமுத்தூர் | |
| 61 | | | கட்டேரி | |
| 62 | | | ஏலகிரி கிராமம் | |
| 63 | | | புத்தகரம் | |
| 64 | | குடியாத்தம் பாரி | மதனாஞ்சேரி | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் |
| 65 | | | ஜாப்ராபாத் | |
| 66 | | | ஈச்சங்கால் | |
| 67 | | | வெலதிகாமணிபெண்டா | |
| 68 | | | இளையநகரம் | |
| 69 | | ஆரூர் மணிவண்ணன் | 1–வது வார்டு | நாட்றம்பள்ளி பேரூர் |
| 70 | | | 3–வது வார்டு | |
| 71 | | | 6–வது வார்டு | |
| 72 | | | 9–வது வார்டு | |
| 73 | | | 11–வது வார்டு | |
| 74 | 8/3/2024 | கரூர் முரளி | புதுக்கோட்டை | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் |
| 75 | | | செலந்தம்பள்ளி | |
| 76 | | | கோனேரிக்குப்பம் | |
| 77 | | | இராச்சமங்கலம் | |
| 78 | | | களரூர் | |
| 79 | | சேலம் சுஜாதா | அரங்கல்துருகம் | மாதனூர் மேற்கு ஒன்றியம் |
| 80 | | | மேல்குப்பம் | |
| 81 | | | வீராங்குப்பம் | |
| 82 | | | மிட்டாளம் | |
| 83 | | | பாப்பனப்பள்ளி | |
| 84 | | கென்னடி | கந்திலி | கந்திலி தெற்கு ஒன்றியம் |
| 85 | | | தோக்கியம் | |
| 86 | | | பெரியகரம் | |
| 87 | | | கதிரிமங்கலம் | |
| 88 | | | அச்சமங்கலம் | |
| 89 | | கந்திலி கரிகாலன் | கொத்தூர் | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் |
| 90 | | | பச்சூர் | |
| 91 | | | கே. பந்தாரப்பள்ளி | |
| 92 | | | ஆத்தூர்குப்பம் | |
| 93 | | | நாயனசெருவு | |
| 94 | | குடியாத்தம் பாரி | நாயக்கனூர் | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் |
| 95 | | | மரிமானிகுப்பம் | |
| 96 | | | மிட்டூர் | |
| 97 | | | நிம்மியம்பட்டு | |
| 98 | | | கொத்தக்கோட்டை | |
| 99 | | | வளையாம்பட்டு | |
| 100 | | | வெள்ளக்குட்டை | |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**

செயலாளர் – திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.